மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோன்று சட்டத் துறையில் கலைச் சொற்களை உருவாக்க ஒரு குழு இருந்தது. அதைப் போன்று மருத்துவத் துறை, பொறியியல் துறை போன்ற பல துறைகளிலும் உள்ள கலைச் சொற்களைக் கொண்ட சிறு சிறு வெளியீடுகள் வந்துள்ளன. அவற்றைத் தொகுத்து ஒரே அகராதியாகக் கொண்டு வருவதற்காகத்தான் இந்த அறிவியல் தொழில் நுட்பச் சொல்லாக்க ஆணைக் கழகம் அமைக்கப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருக்கக்கூடிய கலைச் சொற்களும் புதிதாக கண்டுபிடிக்கப்படும் கலைச் சொற்களும் இந்த அகராதியில் இடம் பெறும்.

Intermediate Course

*183 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is a propcsal to reintroduce the Intermediate course in the Colleges in this State; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) இப்பொருள் பல்கலைக்கழகங்களின் அதிகார வரம்புக்கு உட்பட்டதாகும். அரசு, இதைப் பல்கலைக்கழகங்களுடன் கலந்து ஆய்ந்து வருகின்றது. இப்பொருள் அவைகளால் பரிசீலிக்கப்படுவதாகத் தெரிகிறது.

திரு. என். கே. பழனிசாமி : சார், எல்லா யூனிவர்சிட்டிகளும் இன்டர்மீடியேட்—இரண்டாண்டு ஆக்குவதற்கு ஆதரவு கொடுத்திருந்தும், இன்னும் சர்க்கார் நியமித்த திட்ட கமிஷனல் ஏற்படுத்தப்பட்ட 'டாஸ்க்ஃபோர்ஸ்' கூட இன்டர்மீடியேட்டை இரண்டு வருஷமாக்க சிபாரிசு செய்திருந்தும் சர்க்கார் இதில் கால தாமதம் செய்வதற்கு காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த டாஸ்க்போர்ஸ் குழுவின் அறிக்கை இன்னும் அரசாங்கத்திற்கு அளிக்கப்படவில்லை. அவர்கள் தனிப்பட்ட முறையில் பல

1972 ஆகஸ்ட் 19]

கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்களே தவிர, அதுபற்றி அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்பவில்லை. அவர்களுடைய அறிக்கை கிடைத்ததும், எல்லா துணைவேந்தர்களையும் கலந்து கொண்டு, அரசு ஒரு முடிவுக்கு வரும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த இன்டர்மீடியேட் வகுப்பைக் கொண்டுவருவதானால், பள்ளிக் கல்வி 10 ஆண்டு படிப்பாக இருக்கவேண்டுமா அல்லது 11 ஆண்டு படிப்பாக இருக்கவேண்டுமா என்பதைப்பற்றி முடிவு செய்திருக்கிறார்களா ? அதன் விபரத்தை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதுபற்றியும் கவனம் செலுத்தியிருக்கிறோம். பல்கலைக்கழகத் துணை வேந்தர்களின் கருத்துக்கள் மாறுபட்டவையாக இருக்கின்றன. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 11,2,2 ஆண்டுகளாக இருக்கலாம் என்றும், மதுரைப் பல்கலைக்கழகம் 10,2,3 ஆண்டுகளாக இருக்கலாம் என்றும், கருத்து தெரிவித்திருக்கின்றன. வேறு பல மாநிலங்களில் 10, 2, 3 ஆண்டுகள் என்று வைத்திருக்கிறார்கள். இங்கே பட்டப்படிப்புக்குப் போகிறவர்களுக்கு 10,2,3 என்று 15 ஆண்டு படிப்பை வைக்கலாம் என்றும், பள்ளிக்கல்வியை முடித்துவிட்டு பாலிடெக்னிக் போன்ற டெக்னிக்கல் கோர்ஸ்ஸுக்குப் போகிறவர்களுக்கு அவை சம்பந்தப்பட்ட அட்வான்ஸ்ட் சப்ஜெக்ட்ஸ் சொல்லிக்கொடுப்பதற்காக பள்ளிக் கல்வியை 11 ஆண்டாக்கலாம் என்றும் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இப்படி மூன்று துணைவேந்தர்களும் மூன்றுவித கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, டாஸ்க்ஃபோர்ஸ் குழுவின் அறிக்கை வந்த பின்னால், எல்லாப் பல்கலைக் கழக துணைவேந்தர்களையும் மற்றும் நிபுணர்களையும் கலந்து ஆலோசித்து இதில் ஒரு முடிவு எடுக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இண்டர்மீடியட் வகுப்பை மீண்டும் கொண்டு வரவேண்டுமென்கிற யோசனை நீண்ட காலமாக ஆராய்ச்சியில் இருந்து வருகிறதே. இதை விரைவுப்படுத்த அரசாங்கம் ஏதாவது பல்கலைக்கழகத்திற்கு ஆலோசனை வழங்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பல மாநிலங்களில் முன்பு புகுமுக வகுப்பைக் கொண்டு வந்தார்கள். திரும்ப இண்டர்மீடியட் வகுப்பைக் கொண்டுவந்துவிட்டார்கள்.

1972 ஆகஸ்ட் 19]

நம்முடைய மாநிலத்திலும் கொண்டுவருவதுபற்றித் தான் யோசனை செய்யப்படுகிறது. இப்போதுள்ளது எல்லாம் படிப்புக் காலத்தை 11-2-2 என்று அமைப்பதா, 10-2-3 என்று அமைப்பதா என்பதாகும். பல்கலைக் கழகத் துணைவேந்தர்களை எல்லாம் அரசு கலந்து கொண்டு ஒரு முடிவுக்கு வரும்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, ஏற்கனவே பி.யு.சி. யிலேயே இடம் கிடைக்காத நேரத்தில் இண்டர்மீடியட் இரண்டு ஆண்டு என்று கொண்டு வருவதானது பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்பதாக சமீபத்தில் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் தம்முடைய கருத்தை தெரிவித்திருக்கிறார்களே, இதுபற்றி ஏதாவது யோசிக்கப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதைத்தான் முன்பு குறிப்பிட்டேன். ஒவ்வொரு பல்கலைக் கழகமும் ஒவ்வொரு விதமான கருத்தைச் சொல்கிறார்கள். இப்படி தனித்தனியாக கேட்பதைவிட எல்லோரையும் சேர்த்து வைத்துக்கொண்டு, டாவ்கோர்ஸ் ரிப்போர்ட்டையும் வைத்து பொதுவாக, ஒரு முடிவுக்கு வரும் நடவடிக்கையைத்தான் எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள்

* 184 வின—**திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 22—4—1971-ல் நடந்த வட ஆர்க்காடு மாவட்ட வளர்ச்சிமன்றக் கூட்டத்தில், ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரியும் பணியாளர்களை ஒன்றியங்களுக்கிடையே மாவட்ட அளவில் மாற்ற மாவட்ட ஆட்சித் தலைவருக்கே முழு அதிகாரம் அளிக்க வேண்டுமென்று அரசைக் கோரி தீர்மானித்துள்ளதா?

(இ) ஆம் எனில். அதன் பேரில் அரசு எடுத்த முடிவு என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை. ஆனால், திருச்சிராப்பள்ளி தெற்கு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும், தென்னாற்காடு மாவட்டம், வட கடலூர் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் அரசாங்க ஊழியர்களை மூன்று